திருச்சிராப்பள்ளி ஸ்ரீ ஐயப்ப சங்கம்.
வாரம் ஒரு நீதிக்கதை – 14.06.2026

## அம்மா..!

மழையில் நனைந்து கொண்டே வீட்டிற்குள் நுழைந்தான் மகன்.

"குடை எடுத்துக் கொண்டு போக வேண்டியது தானே." என்று சொன்னார் தாத்தா.

" எங்கேயாச்சும் ஒதுங்கி நிற்க வேண்டியதுதானே." என்றாள் அக்கா.

" சளி பிடிச்சுகிட்டு செலவு வைக்கப் போற பாரு" என்று சொன்னார் அப்பா.

இவர்கள் எல்லாம் இப்படிச் சொல்லிக் கொண்டிருக்கும் போதே...
இவர்களைக் கடந்து வந்து தன் புடவை முந்தானையால் மகனின் தலையை துவட்டிக் கொண்டே திட்டினாள் அம்மா..

மகனை அல்ல...

மழையை.